| | | |
|---|---|---|
| O.S No. | : | 171/2018 |
| DATE | : | 21.01.2026 |
| பெயர் | : | குமாரசாமி |
| தந்தை பெயர் | : | வானசுந்தரம் |

வாதி தரப்பு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி

4. ஆதியில் செல்லம்மாளின் சொத்தும் எனது தந்தை வனசுந்தர முதலியாரின் சொத்தும் ஒருவருக்கே பாத்தியப்பட்டதா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை தாக்கல் செய்த வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியாது. 1982ல் எனது தந்தை மற்றும் வாதிகளுக்கு இடையே கொரடு சம்மந்தமாக பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டு இரண்டு பாகங்கள் எங்களுக்கும் அவர்களுக்கு ஒரு பாகம் என்று முடிவு செய்யப்பட்டது. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தின் 4ம் பக்கத்தில் தெரு திண்ணை, கொரடு பாகப்பிரிவினை பத்திரம் என்று குறிப்பாக கண்டுள்ளது என்றால் சரிதான். தெரு கொரடில் மேற்படி பாகம் பிரித்ததற்கு பிறகு வேறு எந்த பாகமும் கிடையாது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் புழக்கடை குறித்து எந்த குறிப்பும் கிடையாது.

5. வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்க்கவில்லை. 1976ம் ஆண்டு ஸ்ரீராமு நாயுடு வகையராவிடம் இருந்து வாதிகள் சொத்து வாங்கியதை பற்றி எனது தந்தை கூறியதன் அடிப்படையில் எனக்கு தெரியும். வா.சா.ஆ–1 கிரைய ஆவணத்தில் 3ம் பக்கத்தில் உள்ள சொத்து விவரம் சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதில் மேலண்டை வாடையில் தென்புறம் வடக்கு தெற்கு 10 அடி, மேற்கு கிழக்கு 10 அடியில் கக்குஸ் பாத்தியம் உட்பட என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், சாட்சி பின்னர் தானாகவே முன்வந்து தனது தந்தை 1971லேயே மேற்படி பாகத்தை ஏற்கனவே வாங்கிவிட்டார் என்று தெரிவித்தார்.

6. பி.வா.சா.ஆ–6 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. மேற்படி ஆவணத்தில் 10 அடிக்கு 10 அடி புழக்கடையில் உள்ள கக்குஸ் பாத்தியத்தை எனது தந்தை வாங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ( சாட்சி ஆவணத்தை படித்து பார்த்தார்) 32 அடிக்கு 16 அடி காலி மனை புழக்கடையும், புழக்கடைக்கு செல்லும் வழி பாதையும் என்று பக்கம் 3,4 ல் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. புழக்கடையின் மொத்த

விஸ்தீரனம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தில் புழக்கடையில் உள்ள கக்குஸ் பற்றி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது தந்தை தனலட்சுமி அம்மாளிடம் இருந்து கிரையம் வாங்கினார்.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram

Digitally signed by FANNY RAJAN